29th October 1957]

குழு என்ன என்ன யோசனைகளைத் தெரிவிக்கிறதோ அவைகளை எல்லாம் ஆராய்ந்து அவசியமான நடவடிக்கைகளையும் சர்க்கார் எடுத்து வருகிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன யோசனையை அவர்கள் கவனித்துப் பார்ப்பார்கள் என்று நம்புகிறேன்.

Sri K. SATTANATHA KARAYALAR : கன்னியாகுமாரி, செங்கோட்டை தாலூக்காகளில் முன்பு தமிழிலிருந்தவை, இப்போது ஆங்கிலத்தில் நடத்தப்படவேண்டுமென்று செய்திருக்கிறார்கள். இதர இடங்களில் தமிழில் ஆட்சியைக் கொண்டுவர சர்க்கார் முயற்சி செய்யும் நேரத்தில் அங்கும் தமிழிலேயே நிர்வாகம் நடக்கும்படி உத்திரவிடுவார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் சொன்ன விஷயத்தைக் கவனிக்கிறேன். ஒரு பக்கத்தில் ஒரு காரியம் செய்து கொண்டிருக்கும்போது அதுவே பழைய விதிகளின்படி அமுலில் இருந்தால் அதை நீடிக்கச்செய்யவேண்டியதுதான் சரி. எல்லாப் பகுதிகளிலும் தமிழில் நிர்வாகம் நடப்பதற்கு ஏற்பாடு செய்யும்போது அந்தப் பகுதியில் ஆங்கிலத்தைப் புகுத்த வேண்டிய அவசியம் இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

Sri N. R. THIYAGARAJAN : ஐயா, மாமதுரை மாவட்ட மாத் தமிழர் மாநாடு திருவள்ளுவர் காவணத்தில் நடைபெறும் என எங்கள் ஜில்லாவில் ஒரு போஸ்டர் ஒட்டப்பட்டது. சிறுவர்கள் காவணத்திற்கு முன்பு ஒரு கொம்பு போட்டு கோவணம் ஆக்கிவிட்டார்கள், காபியை கொட்டை நீர் என்று தமிழாக்க முடியாது. ஆதலின் இத்தகைய கடுமையான தமிழ் பதங்களின்றி எளிமையான முறையில் நிர்வாகத்திற்கு தமிழ்ச் சொற்கள் உபயோகப்படுத்துவார்களா !

The Hon. Sri C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் சொன்னது என்ன எனத் தொழில் இலாகா மந்திரி அவர்கள் இப்போதுதான் கேட்டார்கள். ஸ்ரீ தியாகராஜன் பேசினது தமிழா அல்லது வேறு ஏதாவதா ? இவ்வாறு அர்த்தம் புரியாத தமிழாக இல்லாமல் எல்லாருக்கும் புரிகின்ற முறையில் தமிழில் நிர்வாகத் தமிழ் சொற்கள் இருக்குமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Sri S. NAGARAJA MONIGAR : தமிழ் பக்தி நமது அரசாங்கத்திற்கு அதிகமாக இருக்க, மற்ற கட்சிகள் எதிர்பார்ப்பதைவிட தீவிரமாக அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்து வரும் நேரத்தில் இந்தக் கேள்விக்கு இவ்வளவு நேரமா செலவிட வேண்டும்.

Mr. SPEAKER : இந்தக் கேள்விக்கு மந்திரி அவர்கள் பதில் சொல்ல வேண்டியது இல்லை. அடுத்த கேள்வி 22-க்கும், **30-Aக்கும்** சேர்ந்து அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

Arrest of Socialist Party members

* 22 *Q.*—Sri S. PAKKIRISWAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of members of the Socialist Party arrested in the month of August 1957 in the whole State for offering satyagraha before Government offices and for defying section 41 of the Madras City Police Act;

(*b*) whether it is a fact that certain members of the Socialist Party were arrested under section 151 of the Criminal Procedure Code in certain districts of the State ;

(*c*) if so, the number of such persons;

[29th October 1957

(*d*) whether it is a fact that the Police authorities were asked to collect the fine levied from such of the Socialist Party members also who preferred imprisonment to payment of fine; and

(*e*) if so, the number of such cases and the amount so collected?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 917.

(*b*) Yes.

(*c*) 35.

(*d*) Yes.

(*e*) 129 cases, but the collection of fine has been made only in three cases, the amount collected being Rs. 60. One hundred and twenty-six cases are pending realization of fines.

* 30-A. *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of Socialist satyagrahis arrested so far in the State; and

(*b*) the number convicted and the number let off?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The following is the number of volunteers arrested in connexion with the agitation launched by the Socialist Party in this State :—

August 1957	917
September 1957	362
October 1957 (up to 11th October 1957)	14
Total ...	1,293

(*b*) All the 1,293 volunteers who were arrested were convicted.

SRI S. PAKKIRISWAMI PILLAI : சாத்வீக தோரணையில் சத்தியாக்கிரஹம் செய்யும் சோஷலிஸ்டுத் தொண்டர்களை செக்ஷன் 151-ஆவதின் கீழ் அரஸ்டு பண்ணுவதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சாத்வீக முறையில் இயக்கத்தை நடத்துவது என்றாலும் எந்த எந்த சட்டத்திற்கு விரோதமாக நடந்து கொள்கிறார்களோ அந்த அந்த சட்டத்தை மீறிய குற்றத்திற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளத்தான்படும். இவ்வாறு சத்தியாக்கிரகம் செய்ய முன் வரும் கட்சித் தொண்டர்கள் சிறைக்குச் செல்ல வேண்டுமென்ற கட்டுப்பாட்டுக்கு உட்பட்டே அதில் வந்து கலந்து கொள்ளுகிறார்கள். அதில் சிறைக்குச் செல்ல முடியாதவர்கள் கட்சித் தலைமையைக் கூட இழக்க நேர்ந்திருக்கிறது என்பது அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும்.

SRI M. KALYANASUNDARAM : அவர்கள் கட்சி எதை எதிர்க்கிறது ? இவர்கள் என்ன சட்டத்தை மீறினார்கள் ? எதற்காக இப்படி ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட நேர்ந்திருக்கிறது ?